## வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - 2020

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639– எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2639/2640 (எஸ்எவ்) எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2012 நவம்பர் 19 ஆம் திகதிய 2890 (எஸ்ஆர்ஜ) எஸ்எவ் மற்றும் 2891 (எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.04 மற்றும் 4.05 ஆம் பிரிவுகள் எள்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்குகின்றதுடன் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவர்கள் கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமைசெய்து ஒருங்கிணைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக உள்ளது. வட மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 170 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயறதிட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,790 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 146 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும் 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2890 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மேலதிக நிதியளித்தல் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 68 மில்லியனை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. அதில் ரூபா 4,420 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 34 மில்லியன் வட மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் வட மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள தேசிய வீதி நெடுஞ்சாலைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் 2010 ஒக்தோபர் 22 இல் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்திருந்தது. மேலதிக நிதியளித்தல் உடன்படிக்கைகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்

தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட காலப்பகுதியின் போது ரூபா 535.68 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட போதிலும் சொத்துக்களின் உரிய பட்டியல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுமதிகளுடன் கூடிய சொத்துக்களின் விபரங்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்படி சொத்துக்களின் கையேற்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | ரூபா 67,007,655.63 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் ரூபா 93,800,000.00 பெறுமதியான வாகனங்களுக்கான பட்டியல்கள் மற்றும் கையளிப்பு ஆவணங்கள் என்பன 2020 ஆம் ஆண்டின் போது ஆர்டிஏ இற்கு கையளிக்கப்பட்டதுடன் முன்னைய நிதியாண்டுகளிற்குரிய ரூபா 372,000,288.83 பெறுமதியான சொத்துக்கள் பல சந்தர்ப்பங்களில் பகுதி பகுதியாக ஆர்டிஏ இற்கு கையளிக்கப்பட்டிருந்தன. | ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் ஏனைய பதிவுகள் செயற்திட்ட அலுவலகத்தால் தனித்தனியாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 3.71 மில்லியன் தொகையான மின்சாரம், தொலைபேசி, நீர், அலுவலக வாடகை மற்றும் துப்புரவு சேவைக் கட்டணங்கள் போன்ற மேந்தலைக் கிரயம் மற்றும் ரூபா 28.65 மில்லியன் கூட்டுமொத்தமான செயற்திட்ட | NRCP இற்காக நிறுவப்பட்ட அதே அலுவலகத்தில் அமுல்ப்படுத்தப்படுகின்ற 3 செயற்திட்டங்கள் காணப்படுகின்றன. செயற்திட்டங்களுக்கிடையில் பொதுவான செலவினங்களை ஒதுக்கீடு செய்தல் சரியான | அத்தகைய செயற்திட்டங்களின் சரியான கிரயங்களை தனித்தனியாக பிரதிபலிப்பதற்கு செயற்திட்டங்களுக்கு இடையே செயற்திட்டத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரிப்பு செலவினங்கள் என்பன அதே கட்டிடத்தில் செயற்படுகின்ற ஏனைய மூன்று செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்படாமல் இச் செயற்திட்டத்தின் கிரயமாக அறவிடப்பட்டிருந்தன. | முறையாக உள்ள போதிலும் பெரும்பாலான வளங்கள் NRCP இற்கு சொந்தமானவையாகும். | மேந்தலை கிரயம் பிரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2890 (எஸ்ஆர்ஜ) (எஸ்எவ்) ஆம் இலக்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடனில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,833.53 மில்லியன் பேரேட்டு மீதி நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 4,831.56 மில்லியனாக தவறாகக் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகையால் கடன் மீதியானது ரூபா 1.97 மில்லியனால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 இல் உள்ளவாறான நிதிகளில் மாற்றம் தொடர்பான கூற்றை தயாரிக்கும் போது 2020.01.01 இல் உள்ளவாறு தவறான ஆரம்ப மீதி எடுக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,961,961 மற்றும் ரூபா 8,506,421 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | சரியான கடன் மீதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஈ) | 2891 (எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடனில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,134.06 மில்லியன் பேரேட்டு மீதி நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 4,142.60 மில்லியனாக தவறாகக் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகையால் கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 8.54 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 2020.12.31 இல் உள்ளவாறான நிதிகளில் மாற்றம் தொடர்பான கூற்றைத் தயாரிக்கும் போது 2020.01.01 இல் உள்ளவாறு தவறான ஆரம்ப மீதி எடுக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,961,961 மற்றும் ரூபா 8,506,421 வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | சரியான கடன் மீதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (உ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்த பெறுமானத்தேய்வாக 20-093 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவு மூலம் ரூபா 67.05 மில்லியன் தொகை பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 43.56 மில்லியனாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 23.48 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு கருத்துரை உண்மையாகவே சரியானதாகும்.<br><br>2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்தம் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சரியான நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 5 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் முகவர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாக உள்ள போதிலும் நிறைவேற்றல் முகவர் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகும். MOH இன் கணக்காய்வு பிரிவு அடிக்கடி வந்து இச் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வு செய்கின்றது. | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | செயற்திட்டத்தால் நிலையான சொத்துகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில் லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் புனரமைக்கப்பட்ட 03 தேசிய வீதிகளின் 03 வருட செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்புப் பணிகள் உட்பட 10 பொதிகளின் கீழ் வழங்கப்பட்ட வட மற்றும் வடமத்திய மாகாணத்தின் 06 தேசிய வீதிகளின் 170 கிலோமீற்றரிலான பிரிவுகளின் புனரமைப்புப் பணிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், ஏனைய 02 தேசிய வீதிகளின் புனரமைப்புக்கான ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் கீழ் வீதிகளை புனரமைப்பது தொடர்பாக சேமிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் மேலதிக நிதி ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட வட மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள 07 தேசிய வீதிகளின் 122 கிலோமீற்றரிலான ஏனைய பிரிவுகளின் புனரமைப்புப் பணிகள் 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. கடன்களின் சேமிப்புக்களில், A 009 கண்டி யாழ்பாண வீதியை புனரமைப்பதற்காக புதிய ஒப்பந்தம் 2017 ஏப்ரல் 28 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு ரம்பேவ தொடக்கம் மதவாச்சி வரையிலான 9.64 கிலோமீற்றரிலான வீதிப் பிரிவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், மதவாச்சி, ஹொரோவ்பத்தான வீதி (B238) பிரிவில் இருந்து புனரமைப்பதற்கு அமைச்சரவை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயற்திட்டம் அங்கீகாரத்தை பெற்றிருந்ததுடன் அவை தொடர்பாக இரண்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், புனரமைப்பு பணிகள் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதவாச்சி ஹொரவ்பொத்தானை வீதியின் இரண்டு பிரிவுகளை புனரமைத்து தரமுயர்த்துதல் 2019 திசெம்பரில் பூர்த்தி செய்யப்படுவதற்காக ரூபா 1,388 மில்லியன் கிரயத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் அது 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | 2019 மார்ச் 30 இல் பணிகள் தொடங்கப்பட்டு, 2019 திசெம்பர் இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக நாட்டில் அமைதியின்மை காரணமாக 2019 ஏப்ரலில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கும் வெடிபொருள் வழங்குவதை அரசாங்கம் கட்டுப்படுத்தியிருந்தது. இந் நிலைமை நிர்மாண நடவடிக்கைகளை பெரிதும் பாதித்திருந்தன. மேலும், 2020 மார்ச் முதல் மே வரை கொவிட் 19 தொற்றுநோயால் நிர்மாண நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் ஒப்பந்ததாரர்கள் தளத்தை தற்காலிகமாக மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களால் ஏற்பட்ட தாமதத்திற்கிணங்க ஒப்பந்தங்களை 2020 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் மிகுதியாகவுள்ள செயற்திட்ட காலப்பகுதி கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மதவாச்சி முதல் மன்னார் வரையிலான வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய 13 வீதிகள் 63 நாட்கள் தொடக்கம் 214 நாட்கள் வரையிலான வீச்சிலான தாமதங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டக் காலப்பகுதியின் போது மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து தாமதக் கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மதவாச்சி மன்னார் வீதியில் ஒப்பந்தப் பொதி CP 16 மாத்திரமே ஆரம்ப ஒப்பந்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கின்றோம். அளவு அதிகரிப்பு, மண் வழங்கலுக்கான மண் அகழ்வுச் செயற்பாடு கட்டுப்படுத்தப்பட்டமை, பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மேலதிக பணிகள் போன்ற ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நியாயமான காரணங்களினால் ஏனைய அனைத்து ஒப்பந்தப் பொதிகளுக்கும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டது. ஒப்பந்த காலப்பகுதி அங்கீகரிக்கப்பட்ட | ஒப்பந்த உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | EOT மூலம் நீடிக்கப்பட்டதும் ஒப்பந்த காலப்பகுதி முடிவடையும் வரை LD ஐக் கழிப்பதற்கான காரணம் எதுவும் காணப்படவில்லை. ஆகையால் ஒப்பந்தத்திற்கு தாமத சேதங்கள் எதுவும் கழிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | A 009 கண்டி யாழ்பாண வீதியை புனரமைத்து மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டில் ரம்பேவ முதல் மதவாச்சி வரையிலான வீதியில் ஒரு பிரிவானது கிரய மதிப்பீடுகளை தயாரிப்பதில் போதியளவு கவனம் செலுத்தப்படாமையின் காரணமாக வழங்கப்பட்ட ஒப்பந்த கிரயத்தை விட 3.01 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 24.12 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், அளவீட்டு விலைப்பட்டியலிலுள்ள 32 உருப்படிகள் 59.66 சதவீதத்திலிருந்து 1845 சதவீதம் வரையிலான வீச்சில் மதிப்பிடப்பட்ட வேலைகளின் அளவுகளை விட குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்ததுடன் வழங்கப்பட்ட ஒப்பந்தக் கிரயத்தை விஞ்சி ரூபா 136.63 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிலத்தின் நிலைமை தொடர்பான விபரமான ஆய்வு எதுவுமின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. சிவில் வேலைகளின் போது நிலத்தின் அடியில் உள்ள நடத்தை மற்றும் எதிர்பாராத செயற்பாடுகளை துல்லியமாக கணிக்க முடியாதுள்ளதால் மதிப்பீடும் ஒரு சில கருத்தியல் எடுகோள்களுடன் தயாரிக்கப்படுகின்றது. | ஒப்பந்ததாரரை ஊக்குவித்து வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் நிர்மாண வேலைகளை நெருக்கமாக மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |